# கலைஞரும் நானும்

100

" 'என்ன பதிப்பாளர்...' என்கிற இரண்டே வார்த்தைகள்தான், அந்தப் பார்வையும், புன்னகையும் ஆயிரம் சொல்லும்" எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கத் தலைவரும் பதிப்பாளருமான சேது. சொக்கலிங்கம்.



## 'கலைஞர், இலக்கியக் காவலர்!'

**சேது சொக்கலிங்கம், பதிப்பாளர்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை சிறுவயதிலிருந்தே அறிவேன். அவரது ஆளுமைத் திறன்களை வியந்த இளைஞனாக, சென்னையில் பதிப்புத் தொழிலில் ஈடுபடத் தொடங்கிய, 1980 காலகட்டங்களிலேயே அவரைச் சந்தித்திருக்கிறேன். கலைஞர் மிகவும் ஆதரவு காட்டிய 'முத்தமிழ்ப் பேரவை'யின் செயல்பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்ட வகையில், என்னையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அந்த அமைப்பின் நிகழ்ச்சிகளுக்குத் தலைவரை அழைப்பதற்காக மூத்த நிர்வாகிகளுடன் செல்வது தொடங்கி, பின்னர் எனது தலைமையில் நிர்வாகிகள் சந்திப்பது வரை பல சந்திப்புகள் மறக்க முடியாதவை.

எங்கள் 'கவிதா பதிப்பக'த்தின் இரண்டு நூல்களுக்கு 1991-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் விருதினை அவரது கரங்களால் பெற்றிருக்கிறேன். அவற்றையெல்லாம்விட, ஒரு பதிப்பாளராக நான் கலைஞரிடம் வியக்கும் விஷயம், அவர் எழுத்தாளர்களின் காவலர், தமிழ் இலக்கியத்தின் காவலர் என்பதுதான்.

### இந்தியாவின் சொத்து

எழுத்தாளர் ஜெயகாந்தன் எனக்கு மிகவும் நெருக்கம். அவரது நூல்களை எல்லாம் வெளியிட்டிருக்கிறேன். அவர் உடல்நலம் சரியில்லாதபோது, 'அப்போலோ மருத்துவ மனை'யில் பிரதாப் ரெட்டியிடம் பேசி, அவரை அங்கு சேர்த்தவர் கலைஞர். 'ஜெயகாந்தன் இந்தியாவின் சொத்து, தமிழ்நாட்டின் சொத்து' என கலைஞர் மருத்துவரிடம் வலியுறுத்தியதை அறிந்தவன் நான். அதேபோல, மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆனபோது, ஜெயகாந்தன் கலைஞரை நேரில் சென்று சந்திக்க விரும்பினார். ஆனால், கலைஞரோ 'ஜெயகாந்தனைப் பார்க்க நானே வருகிறேன்' என மறுத்து, அவருக்கு உரிய மரியாதை செய்தார். இப்படிப் பல நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

ஜெயகாந்தனுக்கும் கலைஞருக்கும் எதிரெதிர் அரசியல் கண்ணோட்டம் இருந்த நிலையில், அதையெல்லாம் பொருட்படுத்தாமல், ஜெயகாந்தனை மருத்துவமனையில் சேர்க்க அவர் ஏற்பாடு செய்ததை என்னவென்பது!

### பிரபஞ்சனுக்கு விருது

2007-ஆம் ஆண்டு புத்தகக் காட்சி நிகழ்வைத் தொடங்கி வைப்பதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது நான், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் - பதிப்பாளர்கள் சங்கத்தின் (பபாசி ) பொறுப்பில் இருந்தேன். அந்த ஆண்டு சென்னை புத்தகக் காட்சியில் எழுத்தாளர் பிரபஞ்சனுக்கு 'பபாசி' சார்பில் விருது வழங்கி மரியாதை செய்தோம். விழா மேடையில், கலைஞுடன் விருது பெற்ற எழுத்தாளர் பிரபஞ்சனும் அமர்ந்திருந்தார். அப்போது பிரபஞ்சனிடம் கலைஞர், "விருதுத் தொகை எவ்வளவு?" எனக் கேட்டிருக்கிறார். அதற்கு பிரபஞ்சன் , "விருதுதான் கொடுத்தாங்க. தொகை எதுவும் கொடுக்கவில்லை" என்று கூறி இருக்கிறார். விழாவின் உரையில் அதைக் குறிப்பிட்ட கலைஞர், அந்தக் குறையைப் போக்க, எழுத்தாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரொக்கப் பரிசுடன் விருது வழங்க, பபாசிக்கு ஒரு கோடி ரூபாய் நிரந்தர வைப்புத் தொகையாக அளிப்பதாக அறிவித்தார்.

அடுத்த நாள் காலை பல வேலைகளுக்கு இடையிலும் கலைஞரிடமிருந்து அழைப்பு வந்தது. சொல்லியதுபோல, கலைஞர் அறக்கட்டளையில் இருந்து ஒரு கோடி ரூபாய்க்கு காசோலை எழுதி கையில் அளித்தார். "இனிமே எழுத்தாளர்களுக்கு விருது மட்டும் கொடுக்காதீங்க, ரொக்கமும் சேர்த்துக் கொடுங்க" என்று கூறினார். எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்தும்போது, அவர்களுக்கு அது பணப் பயனாகவும் இருக்கவேண்டும் என நினைத்த அந்தப் பண்புதான், இன்று 'கலைஞர் பொற்கிழி'யாக ஆண்டுதோறும் ஏழு பேருக்கு கலைஞரின் அன்பாகச் சென்று சேர்கிறது.

அதற்கு அடுத்த ஆண்டு, முதல்முறையாக 'கலைஞர் பொற்கிழி' விருதுக்கான பெயர் பட்டியலைத் தயார் செய்துகொண்டு அவரிடம் செல்கிறோம். ஏழு பேர் கொண்ட பட்டியலில் 2 பேரை இறுதி செய்யாமல் அவரிடம் நீட்டினோம். "ஏன் அந்த இடம் பெயர் இல்லாமல் இருக்கு? தேர்வு செய்யவில்லையா? எனக் கேட்டார்." "நீங்க,



யாருக்காவது கொடுப்பதற்கு விரும்பலாம். அதனால் முடிவு செய்யவில்லை"என்றோம். அதற்கு அவர், "யாருக்கு விருது அளிப்பது என்று முடிவு எடுக்கவேண்டியது, உங்கள் சங்கம்தான். உங்கள் தேர்வுப் பட்டியலில் நான் தலையிட மாட்டேன். எங்க கட்சியின ருக்குப் பல விருதுகளைக் கட்சியின் சார்பாகவே கொடுக்கிறோம். அதனால் பட்டியலை முழுமைப்படுத்திக்கொண்டு வாருங்கள்" என்றார். எழுத்தாளராக, பத்திரிகையாளராக அவருடைய பண்பும், பெருந்தன்மையும் அவர் உயரத்தை இன்னும் அதிகப்படுத்தின.

### இலக்கிய வாசிப்பாளர்

'கணையாழி' இலக்கிய இதழின் ஆசிரியர் ம.ராசேந்திரன் அவர்கள், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்றபோது, அந்த இதழை எனது 'கவிதா பதிப்பகம்' வழியாக வெளியிட்டு வந்தோம். அப்போது, ஒருமுறை பத்திரிகையை எடுத்துக் கொண்டு, ம.ராசேந்திரன் அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். இலக்கிய உரை யாடல்களில் மெய் மறந்தவர் கலைஞர். பேச்சு நீண்டு கொண்டிருந்தபோது "கணையாழி எவ்வளவு இதழ்கள் அச்சடிக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு ம.ரா அவர்கள் பதில் சொன்னார்.

கலைஞர் உடனே "நான் உங்களிடம் கேட்கலையே, பதிப்பாளர்கிட்ட கேட்கிறேன்" என்று மடக்கினார். நான் அச்சிடும் எண்ணிக்கையைச் சொன்னதும், "இலக்கியம் படிக்கிற ஆட்கள் அவ்வளவு பேர்தான் இருக்கிறார்களா?" என்று புன்முறுவல் செய்தார். அப்போதிருந்த அரசியல் நெருக்கடி யான சூழலிலும் அவரால் இலக்கியம் குறித்துப் பேச முடிகிறது என்றால், அவரது ஆளுமை, வியப்புகளுக்கும் அப்பாலானது.

'கவிதா பதிப்பக'த்தில் முக்கிய நூல்கள் வெளியிடுகையில், கொண்டுபோய் சேர்த்து விடுவேன். அதுபோல, அவருக்கு ஏதேனும் நூல்கள் தேவையென்றால், ஆட்களை அனுப்பி வாங்கிவரச் செய்வார். அவரது பிறந்த நாளின்போதும், எவ்வளவு கூட்டமாக

> **அரசியல் நெருக்கடியான சூழலிலும் அவரால் இலக்கியம் குறித்துப் பேச முடிகிறது என்றால், அவரது ஆளுமை, வியப்புகளுக்கும் அப்பாலானது.**

இருந்தாலும் அவரைச் சந்தித்து விடுவது வழக்கம். வீட்டிற்குள் சென்றதும், தயாளு அம்மாள் அவர்கள் பார்த்துவிட்டால், அவரே அழைத்துச் சென்று பின்படிக்கட்டு வழியாக தலைவரைப் பார்க்க அனுப்பி வைப்பார். அப்போதும், கொண்டு செல்லும் புத்தகங்களை புரட்டிப் பார்த்துவிட்டுத்தான் அனுப்பி வைப்பார்.

அவருடனான எனது அனுபவங்கள், இலக்கியம், இலக்கியவாதிகள் எழுத்து என்பதாக இருந்தது, பதிப்பாளராக எனக்கு கிடைத்த பெரிய வாய்ப்பாகவே நினைக்கிறேன். அவர் கையெழுத்திட்டு அளித்த ஒருகோடி ரூபாய் காசோலை, ஒவ்வோர் ஆண்டும் தமிழ் இலக்கியவாதிகளுக்கு உரிய மரியாதை செய்து கொண்டிருக்கும்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## "ஒரேநாடு... ஒரே கொள்ளை!"

"பல்வேறுபட்ட பண்பாடுகளைக் கொண்டுள்ள நாட்டில், ஒற்றைப் பண்பாட்டை நிறுவும் நோக்கத்துடன் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முறையைக் கொண்டு வர, ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது, ஜனநாயக விரோத நடவடிக்கை, மாநிலங்களின் குரல்களை அழித்து, கூட்டாட்சித் தன்மையை சிதைத்து, ஆட்சியைச் சீர்குலைக்கும். இந்தியாவே எழுக! இந்திய ஜனநாயகத்தின் மீதான இந்தத் தாக்குதலை முழுபலத்துடன் எதிர்ப்போம்" என்று எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார், நமது முதலமைச்சர் அவர்கள்.

சமூக வலைதளத்தில் எதிர்ப்பினைப் பதிவு செய்துள்ள எழுத்தாளர் சூர்யா சேவியர், இம்முயற்சிக்கு இந்தியா மிகப்பெரிய விலையை எதிர்காலத்தில் கொடுக்க வேண்டி வரும் என்றும், இது அதானிக்கான திட்டம் என்றும் விமர்சனம் செய்துள்ளார்.

அவரது பதிவில், "2024-நாடாளுமன்றத் தேர்தலின் மைய விவாதமே, 'அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம்' என்பதுதான். இம்முழக்கமே 'இந்தியா' கூட்டணியின் பிரதான முழக்கமாக இருந்தது. 303 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையிலிருந்து 240 என்ற எண்ணிக்கைக்கு பா.ஜ.க. வீழ்ந்ததற்கும் இதுவே பிரதான காரணம். இந்திய மக்களின் எதிர்ப்பையும் மீறி, தனது சர்வாதிகார அரசியலை பா.ஜ.க. தொடர்கிறது. இதன் விளைவு, இனிவரும் மாநிலத் தேர்தல்களில்

'மாநிலங்களை பா.ஜ.க.விடமிருந்து பாதுகாப்போம்' என்பதாகவே மாறும்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்பதன் உள்ளடக்கம் யாதெனில்,

"ஒரே சந்தை

ஒரே கொள்ளை

ஒரே அதானி

என்பதே" எனப் பதிவிட்டுள்ளார். 'வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்' என்று அவர் வெளியிட்டுள்ள இந்தப் பதிவு கவனம் பெற்றுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### வாக்கு சேகரித்த தலைவர்!



நிர்மலா தேவி

2001-ஆம் ஆண்டு சென்னை, சேத்துப்பட்டு, அன்றைய 104-வது வட்டம், இன்றைய 108-வது வட்டத்தில் கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிட்டேன். எனக்கு வாக்கு சேகரிக்க அன்றைய சென்னை மேயரும், இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சருமான நமது தளபதி அவர்கள் வருகை தந்திருந்தார்கள். பிரச்சாரத்தில் எனது பெயரை 'ஃபீல்டு வொர்க் நிர்மலா' என்று குறிப்பிட்டு, மக்களிடம் அறிமுகம் செய்தது மறக்க முடியாத நிகழ்வு. கவுன்சிலராக வெற்றிபெற்று, அவர் மேயராக இருந்த அவையில் செயல்பட்டதும், மறக்க முடியாத அனுபவம். தலைவர் அவர்களைச் சந்திக்கச் செல்லும்போதெல்லாம் அந்தப் பெயரையே சொல்லி அழைத்து, கட்சிப் பணிகள் குறித்து விசாரிப்பார். இப்போது கழகத்தில் தலைமைக் கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றுகிறேன்.

**– நிர்மலா தேவி, கழகப் பொதுக்குழு உறுப்பினர், சேத்துப்பட்டு, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### மலர்ந்தது, மகளிர் அணி!

21.08.1956 அன்று என்.வி.நடராசன் இல்லத்தில், கழக மகளிர் அணியைத் தோற்றுவித்தார், பேரறிஞர் அண்ணா. தலைவராக சத்தியவாணி முத்து, செயலாளர்களாக ராணி அண்ணாதுரை, அருண்மொழி செல்வம், வெற்றிச்செல்வி அன்பழகன், புவனேஸ்வரி நடராசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயற்குழு உறுப்பினர்களாக தயாளு அம்மாள், நாகரத்தினம், சுலோச்சனா என கழக முன்னணித் தலைவர்களின் மனைவி மார்களே முதலில் நியமிக்கப்பட்டனர். அதனால், தொண்டர்களின் வீடுகளில் இருந்தும் மகளிர் சாரை சாரையாக அணியில் இணைந்தனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

690

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.